සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
මුදල් අමාත්‍යාංශය
සමෘද්ධි , ගෘහ ආර්ථික, ක්ෂුද්‍ර මූල්‍ය, ස්වයං රැකියා, ව්‍යාපාර සංවර්ධන හා උෟණ උපයෝජන
රාජ්‍ය සම්පත් සංවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும்
கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
Ministry of Finance
State Ministry of Samurdhi, Household Economy, Micro Finance, Self Employment, Business
Development and Underutilized State Resources Development

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No DSD/HO/05/MF/02/08/2021-VI | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No ........ | දිනය<br>திகதி<br>Date 2021.03.23 |

அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்.

**<u>சமுர்த்தி வங்கிகளின் அறவிடமுடியாக் கடனாளிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளல்.</u>**

சமுர்த்தி வங்கிகளினால் சிறுகுழுப் பிணையின் அடிப்படையில் பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட கடன் தொகைகளில் சில கடனாளிகள் கடனை மீளச் செலுத்த தவறியமையினால் குறித்த காலத்தின் பின் இக் கடன்கள் அறவிடமுடியா கடன்களாக அடையாளம் காணப்பட்டு தனியான பதிவுகளில பேணப்பட்டு வருகின்றன.

02. இவ் அறவிட முடியாக் கடன் தொகையினை மீள்அறவீடு செய்து கொள்வதற்கு சமுர்த்தி வங்கிகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு அறவீடுகளை செய்து வந்தாலும் சில அறவிட முடியாக் கடனாளிகள் இதுவரை கடன்களை மீளச் செலுத்தாது உள்ளனர்.

03. இவ் அறவிட முடியாக் கடன் தொகையினை மீள்அறவீடு செய்வதனூடாக சமுர்த்தி வங்கிகளின் இலாபத் தன்மையினை அதிகரிப்பதுடன் நிதிச் சொத்துகளின் பெறுமதியினை உயர்த்திக் கொள்ளவும், சிறு குழுவின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் கடன்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கவும் முடியும். இதற்கமைய இக் கடன் தொகையினை மீள அறவீடு செய்வதற்கான வேலைத் திட்டம் ஒன்றை தயாரிக்கும் பொருட்டு தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

04. எனவே சிறுகுழு பிணையின் அடிப்படையில் வழங்கப்பட்ட கடன் தொகைகளில் மீளச் செலுத்த தவறியுள்ள அறவிட முடியாக் கடனாளிகள் தொடர்பான தகவல்களை 03 வகையான கால எல்லைகளாக பிரித்து கீழ் வழங்கப்படும் ஆலோசனைகளின் பிரகாரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 01,02,மற்றும் 3 ஆகிய படிவங்களில் சரியான முறையில் பூரணப்படுத்தி 2021.04.09 ஆம் திகதிக்கு முன்னர் bank@samurdhi.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

i. 2010.12.31 ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அறவிட முடியாக் கடனாக அடையாளம் காணப்பட்ட கடனாளிகள் தொடர்பான பட்டியல் (இணைப்பு – 01)
ii. 2011.01.01 ஆம் திகதியில் இருந்து 2015.12.31 ஆம் திகதி வரை அறவிட முடியாக் கடனாக அடையாளம் காணப்பட்ட கடனாளிகள் தொடர்பான பட்டியல் (இணைப்பு – 02)
iii. 2016.01.01 ஆம் திகதியில் இருந்து 2020.12.31 மே் திகதி வரை அறவிட முடியாக் கடனாக அடையாளம் காணப்பட்ட கடனாளிகள் தொடர்பான பட்டியல் (இணைப்பு – 03)

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்)<br>Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

iv. அறவிட முடியாக் கடனாளியின் தற்போதைய நிலையினை சரியான முறையில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

v. நிலுவைக் கடன் தொகையினை மீளச் செலுத்துவதற்கு எவ்வாறான சலுகையினை கோரியுள்ளார் என்பதை விளக்கமாக குறிப்பிடல் வேண்டும். கோரும் சலுகைகளை குறிப்பிடாது விடின் அக்கடன் தொடர்பாக எந் நடவடிக்கைகளும் எடுக்கப்பட மாட்டாது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

vi. 2020.12.31 ஆம் திகதியில் அறவிட வேண்டியுள்ள மொத்த வட்டித் தொகை மற்றும் அபராத வட்டி என்பவற்றை தனித் தனியாக குறிப்பிடல் வெண்டும்.

vii. கடன் தொகையினை செலுத்த தவறிய தினத்தில் இருந்து 2020.12.31 வரையான அறவிடமுடியாக் கடனுக்கான மொத்த காலத்தையும் மாதங்களில் குறிப்பிடல் வேண்டும்.

viii. அறவிட முடியாக் கடனாளியும் மற்றும் அவரது துணைவரும் மரணமடைந்திருந்தால் அல்லது பூரண இயலாமைக்கு உள்ளாகின்ற சந்தர்பங்களில் கடன் தொகையினை செலுத்துவதற்கு பிள்ளைகள்/உறவினர்கள் இல்லாத போது மாத்திரமே கடன் காப்பீட்டு நன்மையினை கோருவதற்கு இடமளிக்கப்படுகின்றது.

**எஸ்.ஏ.எஸ்.விக்ரமசிங்க**
பணிப்பாளர் (குறுநிதி) ப.க
பணிப்பாளர் நாயகத்திற்காக.

**பிரதிகள்:-**

1. அனைத்து மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கும் - தகவலுக்காகவும், உ.ந.பொருட்டும்
2. அனைத்து பிரதேச செயலாளரகளுக்கும் - தகவலுக்காகவும், உ.ந.பொருட்டும்

Translated by :- I.Aliyar
District Samurdhi Director - Mannar